சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – தகுதி வாய்ந்த மாற்றுத்திறனாளிகள் தாங்கள் பயன்படுத்த விரும்பும் உதவி உபகரணங்களின் வகை மற்றும் மாதிரியில் தேர்வினை (Choice Based) வழங்கும் வகையில் நேரடி மானியம் வழங்கும் திட்டம் – முதற்கட்டமாக 5 உதவி உபகரணங்களுக்கு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை

அரசாணை (நிலை) எண்.01

நாள்: 07.01.2022
பிலவ, மார்கழி 23,
திருவள்ளுவர் ஆண்டு, 2052.

படிக்கப்பட்டது :

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் கடித ந.க. எண்.9141/உ.உ-பிரிவு/2021, நாள் 22.11.2021.

******

ஆணை:-

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2021-2022 ஆம் ஆண்டிற்காக திருத்தப்பட்ட நிதிநிலை அறிக்கையில், ஏனையவற்றுடன், மாண்புமிகு அமைச்சர் (நிதி (ம) ம.வ.மே.) அவர்களால் 13.08.2021 அன்று கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது:-

> "தகுதி வாய்ந்த நபர்களுக்கு அவர்கள் பயன்படுத்த விரும்பும் சாதனங்களின் வகை மற்றும் மாதிரியில் தெரிவினை வழங்கும் வகையில், நேரடி மானியம் வழங்கும் திட்டத்தையும் இந்த அரசு அறிமுகப்படுத்தும்"

2. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மூலம் தொழில்நுட்ப குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்ற வகையிலான பல்வேறு உதவி உபகரணங்கள் அரசால் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்றும், தற்போது, மேற்காணும் அறிவிப்பினை நிறைவேற்றிடும் விதமாக முதற்கண் கீழ்கண்ட 5 உதவி உபகரணங்களுக்கு மட்டும் 2021-2022 ஆம் நிதியாண்டு முதல் பயனாளிகள் பயன்படுத்த விரும்பும் சாதனங்களின் வகை மற்றும் மாதிரியின் தெரிவினை வழங்கும் வகையில் (Choice Based) நேரடி மானியம் திட்டத்தினை அறிமுகப்படுத்தலாம் எனத் தெரிவித்துள்ளார்:-

| வ. எண் | உதவி உபகரணத்தின் பெயர் |
|---|---|
| 1. | மூன்று சக்கர மிதி வண்டிகள் |
| 2. | சக்கர நாற்காலிகள் |

| | |
|---|---|
| 3. | காதுகளுக்கு பின்புறம் அணியும் காதொலிக் கருவிகள் |
| 4. | மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரங்கள் |
| 5. | பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள் |

3. இத்திட்டத்தின் படி மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் தொழில்நுட்பக் குழுவால் பரிந்துரைக்கப்படும் அறுதியிட்ட வகையிலான உதவி உபகரணத்திற்கு பதிலாக பயனாளிகள் மேற்படி குழுவால் பரிந்துரைக்கப்படும் இதர வகையிலான தங்களுக்குத் தேவையான மாதிரியான உதவி உபகரணத்தை தேர்வு செய்ய அனுமதி வழங்கலாம்.

4. அவர் மேலும் அரசால் ஏற்கெனவே வழங்கப்படும் உதவி உபகரணங்களுக்கு (Assured Models) பதிலாக பயனாளிகள் இதர மாதிரியினை தேர்வு செய்யும் நேர்வுகளில் அவ்வுபகணரத்தின் விலை அரசால் வழங்கப்படும் உபகரணத்தின் விலையை விட கூடுதலாக இருக்கும் பட்சத்தில் கூடுதல் விலையை (Additional Cost) மட்டும் பயனாளிகள் அல்லது அவர்களுக்கு உதவி வழங்கும் நிறுவனங்கள் (Sponsoring Entity) வங்கி வரைவோலை மூலமாகவோ அல்லது இணைய வழி (Online Mode) மூலமாகவோ செலுத்தலாம் என்றும், மாநில அளவிலான கண்காணிப்பு குழுவால் மேற்படி கூடுதல் தொகை செலுத்தப்பட்டதை உறுதி செய்த பின் கொள்முதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பயனாளிகளுக்கு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள் மூலம் அவர்கள் தேர்வு செய்த உபகரணங்கள் வழங்கப்படும் என்றும் அதற்கு முன்னர் ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் உபகரணங்களின் (Assured Models) விலையை நிர்ணயம் செய்திட ஒப்பந்தப்புள்ளி மூலம் விலை விவரம் தனியே கோரப்படும் என்றும் எனவே தகுதி வாய்ந்த மாற்றுத் திறனாளிகள் தாங்கள் பெற விரும்பும் உதவி உபகரணங்கள் வகை மற்றும் மாதிரியில் தெரிவினை (Choice Based) புதிய முறைப்படி வழங்கிட உரிய ஆணை வழங்குமாறு அரசினைக் கோரியுள்ளார்.

5. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் செயற்குறிப்பினை ஆய்வு செய்த அரசு அதனை ஏற்கலாம் என முடிவு செய்து அதனடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:-

(அ) தகுதி வாய்ந்த மாற்றுத்திறனாளிகள் தாங்கள் பயன்படுத்த விரும்பும் உதவி உபகரணங்களின் வகை மற்றும் மாதிரியின் தெரிவினை வழங்கும் வகையில், நேரடி மானியம் வழங்கும் திட்டம் 2021-2022 ஆம் ஆண்டு முதல், முதற்கண் 5 வகை உதவி உபகரணங்களான மூன்று சக்கர மிதிவண்டி, சக்கர நாற்காலி, காதுகளுக்கு பின்புறம் அணியும் காதொலிக் கருவி, மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் மற்றும் பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள்ஆகியவற்றை பொறுத்து செயல்படுத்தப்படும்.

(ஆ) இத்திட்டத்தின் படி மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் தொழில்நுட்பக் குழுவால் பரிந்துரைக்கப்படும் அறுதியிட்ட வகையிலான உதவி உபகரணத்திற்கு பதிலாக பயனாளிகள் மேற்படி குழுவால் பரிந்துரைக்கப்படும் இதர வகையிலான தங்களுக்குத் தேவையான மாதிரியான உதவி உபகரணத்தை தேர்வு செய்ய அனுமதி வழங்கலாம்.

(இ) பயனாளிகள் பெற தேர்வு செய்யும் உதவி உபகரணத்தின் விலையானது அரசால் வழக்கமாக வழங்கப்படும் உதவி உபகரணத்தின் (Assured Models) விலையை விட அதிகமாக இருக்கும்பட்சத்தில் கூடுதல் விலையை மட்டும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரால் பரிந்துரைக்கப்படும் வழிமுறையில் குறிப்பிடப்படும் கால அளவிற்குள் பயனாளிகளால் செலுத்தப்பட வேண்டும். அதன் பின்னரே உதவி உபகரணங்கள் பயனாளிக்கு வழங்கப்படும்.

(ஈ) இத்திட்டத்திற்கான செலவினம் வருடாந்திர வரவு-செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டுக்குள் மேற்கொள்ளவும் மற்றும் வழக்கமாக வழங்கப்படும் உதவி உபகரணங்கள் (Assured Models Price) விலையினை நிர்ணயம் செய்திட தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம், 1998 மற்றும் விதிகள் 2000-இல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளை பின்பற்றப்பட வேண்டும் எனவும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆர். லால்வேனா,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.

<u>நகல்:-</u>
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூகநலம் மற்றும் மகளிர் உரிமை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (சந/வ.செ.பொ-II/வ.வ.I)த் துறை, சென்னை–9.
அரசு செயலரின் முதுநிலை முதன்மைச் தனிச்செயலாளர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

7/01/2022.
பிரிவு அலுவலர்
7.1.22